செ.வெ.எண். 50 நாள். 20.03.2017

# தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் அறிவிக்கப்பட்டுள்ள ஆசிரியர் தகுதி தேர்வுக்கு விண்ணப்பித்து பயிற்சியில் சேர்ந்து கொள்ள அழைப்பு

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் ஆசிரியர் தகுதித் தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. **இத்தேர்வுக்கான விண்ணப்பங்கள் குறிப்பிட்ட பள்ளிகளில் வழங்கப்பட்டு வருகின்றன. விண்ணப்பம்** பெற கடைசி நாள் 22.03.2017. ஆசிரியர் தகுதித் தேர்வில் **தாள்-I மற்றும் தாள்-II** என இரண்டு தேர்வுகள் உள்ளன. ஆசிரியர் பட்டயப் படிப்பு முடித்தவர்கள் தாள்-I தேர்வு எழுத தகுதியானவர்கள். ஆசிரியர் பட்டயப் படிப்பு இரண்டாம் ஆண்டு படிப்பவர்களும் இத்தேர்வை எழுதலாம்.

தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வரலாறு மற்றும் புவியியல் ஆகிய பாடப்பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் பட்டப்படிப்பை முடித்து **B.Ed** பட்டம் பெற்றவர்கள் தாள்-II தேர்வு எழுத தகுதியானவர்கள். தாள்-I எழுத்துத் தேர்வானது 29.04.2017 அன்றும் தாள்-II எழுத்துத் தேர்வானது 30.04.2017 அன்றும் நடைபெற உள்ளது. மேலும் விவரங்களுக்கு **www.trb.tn.nic.in** என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

விண்ணப்பித்தவர்களுக்கு மாவட்ட **வேலைவாய்ப்பு அலுவலகம், திருநெல்வேலியில் தேர்வில் வெற்றி பெற இலவச பயிற்சி வகுப்புகள் 23.03.2017 முதல் தொடங்கப்படவுள்ளது.** இப்பயிற்சியில் சேர விருப்பமுள்ளவர்கள் மேற்குறிப்பிட்ட தேர்வுக்கு விண்ணப்பித்த **விண்ணப்ப படிவ நகல், வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2** ஆகியவற்றுடன் திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அலுவலக வேலை நாட்களில் தொடர்பு கொண்டு தங்கள் பெயரை பயிற்சிக்கு பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. எனவே தகுதியுள்ள அனைவரும் விண்ணப்பித்து, இலவச பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயனடையுமாறு **மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி